(பிற்பகல் 2-59)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்

இல்லை

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

75. வேலைவாய்ப்பு—பயிற்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ் & ஆங்கிலம்).

76. மானியக் கோரிக்கை—வருவாய்த்துறை, 1984-85. (தமிழ் & ஆங்கிலம்).

77. 1984-85 ஆம் ஆண்டிற்கான வருவாய்த்துறை பற்றிய சாதனை அறிக்கை. (தமிழ் & ஆங்கிலம்).

78. கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ் & ஆங்கிலம்).

79. 1984-85 ஆம் ஆண்டிற்கான கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத்திட்டம். (தமிழ் & ஆங்கிலம்).

80. தமிழ் நாடு இறைச்சி நிறுவனச் செயல்பாட்டுத் திட்டம் பற்றிய ஒரு குறிப்பு, 1983-84. (தமிழ் & ஆங்கிலம்).

81. தமிழ் நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டு நடவடிக்கை. (தமிழ் & ஆங்கிலம்).

* 82. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீட்டிற்கு பிழை திருத்தம். (தமிழ்).

இணைப்பு- I

[282 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசாணை (நிலை) எண் 1529, கல்வி, நாள் 22—7—1981-ல் ஆசிரியர் பயிற்சி பட்டம் பெற்றபின் 5 ஆண்டுகள் பயிற்றுவித்து அனுபவம் பெற்ற தமிழாசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகப் பதவி

* 26-3-1984 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

உயர்வு கொடுக்கலாம் என ஆணையிடப்பட்டது. ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்ற பின் 5 ஆண்டுகள் பயிற்றுவித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்று அறிவித்துள்ள நிபந்தனையை மாற்றி ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெறுமுன் உள்ள பணிக்காலத்தையும் கணக்கிடவேண்டுமென சேலம் மாவட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரு தமிழாசிரியர்கள் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தனர். அந்த நீதிப் பேராணை மனுவை ஏற்றுத் தமிழாசிரியர்கள் ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்றபின் உள்ள காலத்தை மட்டும் கற்பித்தல் அனுபவத்தில் கொள்ளாமல் அவர்கள் அதற்கு முன்பு பெற்ற போதனா அனுபவத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு தலைமையாசிரியப் பதவி கொடுப்பது குறித்து பரிசீலனை செய்யவேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவ்வாறே, முதுகலைப் பட்டப் படிப்போடு ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்றபின் 10 ஆண்டு கற்பித்தலில் அனுபவம் உடையவர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியப் பதவி வழங்கலாம் என்ற ஆணையினை எதிர்த்து மதுரை மாநகராட்சிப் பள்ளியில் பணியாற்றும் தமிழாசிரியை தொடுத்த நீதிப்பேராணை வழக்கிலும் நீதிப் பேராணையை (Writ Petition) அனுமதித்து மேற்கண்டவாறே ஆசிரியர் பயிற்சி பட்டம் பெறும் முன் உள்ள போதனா பயிற்சி அனுபவத்தையும் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவ்வழக்கில் உயர்நீதி மன்றத் தீர்ப்பினை எதிர்த்து அரசு நீதிப் பேராணை மேல் முறையீடு விண்ணப்பம் (Writ Appeal) தாக்கல் செய்துள்ளது.

மேற்கண்ட இரு வழக்குகளிலும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆசிரியப் பயிற்சி பட்டம் பெறுமுன் தமிழாசிரியர்கள் பெற்றுள்ள போதனா அனுபவத்தையும் தலைமை ஆசிரியப் பதவி உயர்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும் என்பதே. இந்த இரு தீர்ப்புகளின் அடிப்படையில் மேல் நிலைப் பள்ளி தமிழாசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுப்பது சம்பந்தப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து அரசு மேல் முறையீடு செய்துள்ள நீதிப் பேராணை விண்ணப்பத்தில் உயர்நீதி மன்றம் வழங்க உள்ள தீர்ப்புக்கு கட்டுப்படுத்தி மொழியாசிரியர்களுக்கு அட்டவணை முறையில் தற்காலிகத் தலைமை ஆசிரியர்களாக மேனிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பதவி உயர்வு அளிக்க பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிட்டுள்ளது.